2008 மே 14] [திரு. சி.நா.மீ. உபயதுல்லா]

"*2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(எ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2008) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.*

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

(அஒ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2008), மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*